சென்னை கிழக்கு மாவட்டம், 77வது வட்ட துணைச் செயலாளர் வி.கே.ரவி, ஆர்.அஞ்சலை ஆகியோரின் இல்ல விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர்,இந்து சமய மற்றும் அறநிலையத்துறை, பெருநகர வளர்ச்சித் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு வாழ்த்தினார். உடன் சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர்,எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, 77வது வட்டக் கழகச் செயலாளர் தி.தயாளன்,கே.ஆர். விக்னேஷ்,வி.வினிதா உள்ளிட்ட பலர் இருந்தனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

அண்ணா நகர் 101 'அ' வட்டத்தில் 1000 பேருக்கு உணவு!

நே.சிற்றரசு, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., ச.பரமசிவம் பங்கேற்பு!

சென்னை, நவ.26

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் வடக்குப் பகுதி 101 'அ' வட்ட தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நாளை (27.11.2024) அமைந்தகரை புல்லா அவென்யூ மகப்பேறு மருத்துவமனை அருகில் நடைபெறுகிறது.

101 'அ' வட்ட செயலாளர் சி.பி.திருமலை தலைமையில் மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் முன்னிலை யில் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, மாநிலங்களவை உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணாநகர் பகுதி செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன், 101 வட்ட செயலாளர் க.கோவிந்தராஜ் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மேலும் பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி நிர்வாகிகள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மகளிரணியினர் மற்றும் இளைஞரணியினர் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

மு.ம.செந்தில்குமார் தலைமை! கே.ஏழுமலை, கோமதி மணிவண்ணன் பங்கேற்பு:

தியாகராயர் நகர் 131வது வட்டத்தில் அறுசுவை உணவு!

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, நவ.26-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 131வது வட்ட கழகத்தில் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர்உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாளை (27.11.2024 புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் வட்டக் கழக அலுவலகம் கலைஞர் பொதுநல மன்றத்தில் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி பொதுமக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தலைமையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி, மேற்கு பகுதி கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை எம்.சி., 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன், பகுதி அவை தலைவர் மு.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கி, பொதுமக்களுக்கு உணவு வழங்குகிறார்கள்.

ஆகையால் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி

மாங்காடு நகரத்தில் கழகக் கொடியேற்றி உணவு!

நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஐபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், நவ.26-

மாங்காடு நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ். ஐபருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருகின்ற 27.11.2024 புதன்கிழமை அன்று திராவிட முன்னேற்ற கழகத்தின் இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அன்று காலை 8.00 மணியளவில் வார்டு கழக செயலாளர்கள் அவரவர் பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் வைத்து தங்கள் வார்டில் உள்ள கொடி கம்பத்தில் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி சிறப்பிக்க வேண்டும்.

அதன் பின்பு காலை 9.30 மணி அளவில் மாங்காடு மெயின் ரோட்டில் அமைந்துள்ள தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து கழக கொடி ஏற்றி இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட உள்ளதால் நகரக் கழக நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் என அனைவரும் பெருந்திரளாய் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்து தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம். பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் தெற்கு ஒன்றியம், கிளிக்கொடி ஊராட்சி பரணம்பேடு கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், புதிய மின்மாற்றி, பேவர் பிளாக் சாலை, மாவட்ட குழு நிதியிலிருந்து தார்சாலை, நியாயவிலைக் கடை கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிகள் மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மீஞ்சூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கா.சு.ஜெகதீசன், நா.செல்வசேகரன், மீஞ்சூர் ஒன்றியக் குழு தலைவர் அத்திப்பட்டு ஜி.ரவி, ஒன்றிய குழு உறுப்பினர் வெற்றி(எ)ராஜேஷ், ஊராட்சிமன்ற தலைவர் கவிதாபுருஷோத்தமன், துணைத் தலைவர் மலர்விழிகுமார் ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி மற்றும் 48வது வட்ட கழக சார்பில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி தலைமையில் வட்ட செயலாளர் இரா.பாலன் வரவேற்புரையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, வ.பெ.சுரேஷ், லயோலா.கே.மதன், இர.பொன்இளவரசன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை பணியை தொடங்கி வைத்தனர். இரா.செந்தில்குமார், கி.ராஜேந்திரன், வெ.சு.சத்தியநாராயணன், லட்சுமி வேலு, ரெயின்போ. என்.விஜயகுமார், எஸ்.ரமேஷ், எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வி.மலையம்மாள், விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி, எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, ஜெ.கௌரீஸ்வரன், பாலாலட்சுமணன், நெல்லை.எம்.எம்.சாமி, எஸ்.யுவராஜ், இரா பொன்முடி, ந.குமார், மற்றும் வட்ட நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,பம்மல் தெற்கு பகுதி தி.மு.கழக அவசர செயற்குழு கூட்டம்,பகுதி கழக செயலாளர்,மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில் பகுதி பொருளாளர் உமாசங்கர்,பகுதி துணை செயலாளர் பன்னீர்செல்வம்,பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதி பி.ஜே.வேந்தன்,என்.கே. ரவிச்சந்தின், சு.மனோகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு துணை முதல்வர் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது, டிசம்பர் 3ல் பம்மல் தெற்கு பகுதியில் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் கழக வளர்ச்சி பணி குறித்து ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிச்சந்திரன்,மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு,வட்ட செயலாளர்கள் ஏ. அனிஸ்டன்,வி.எஸ்.ஜெகநாதன்,மு.இன்பசேகர்,என்.காந்தி,எச்.முகமது அப்பாஸ்,மா.சுகுமாரன்,ப.ஸ்ரீதர் மாமன்ற உறுப்பினர்கள் ஆ.மதினாபேகம்,கல்யாணி டில்லி,ரம்யா சத்தியபிரபு,சத்யா மதியழகன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி தலைமை! இரா.பாலன் வரவேற்புரை!

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் இல்லந்தோறும் இளைஞரணி சேர்க்கை!

ஆர்.டி.சேகர் - ஐட்ரீம் இரா.மூர்த்தி துவக்கி வைத்தனர் ! ஜே.ஜே.எபினேசர் - வ.பெ.சுரேஷ் முன்னிலை!

சென்னை நவ.26-

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி மற்றும் 48வது வட்ட கழக சார்பில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கட்பீஸ்.ப. சோமசுந்தரமூர்த்தி தலைமையில் வட்டச் செயலாளர் இரா.பாலன் வரவேற்புரையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் லயோலா.கே.மதன், இர.பொன்இளவரசன் ஆகியோர் முன்னிலையில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை பணியை நடைபெற்றது.

இதில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் ஐட்ரீம். இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை பணியை இராயபுரம் சட்டமன்ற தொகுதி மேற்கு பகுதியில் 48வது வட்டத்தில் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் கி.ராஜேந்தி ரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் லட்சுமி வேலு, ரெயின்போ.என். விஜயகுமார்,

எஸ்.ரமேஷ் பகுதி நிர்வாகிகள்: எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வி.மலையம்மாள் விஜயலட்சுமி விஜயகுமார் எம்.சி, வட்டச் செயலாளர்கள்: எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, ஜெ.கௌரீஸ்வரன், பாலா லட்சுமணன், மாவட்ட பிரதிநிதிகள்: நெல்லை.எம்.எம்.சாமி, எஸ்.யுவராஜ், இரா.பொன்முடி, ந.குமார், கோ நித்யானந்தம், என்.ஹயாத் பாட்ஷா, ந.மணிமாறன், எஸ்.தங்கவாசகி, என்.சிவகுமார், பி.பாலாஜி, டப்யு.எஸ். ரவிச்சந்திரன், சி.சின்னராஜ், பாபா.ஜி.சீனிவாசன், கே.குணசேகரன், பி.சுந்தரி, கா.சாமுண்டீ ஸ்வரி, எஸ். ஜானகிராமன், பி.வி.சரத், கா.ரீதர், கௌரிநாதன், சாந்தகுமார், சி.ஜி.காலனி விக்கி, கே.மனோஜ்குமார், எஸ்.கார்த்திகேயன், டிபன். ஆர்.செல்வம், எம்.பன்னீர் செல்வம், ஹரிகிருஷ்ணன், கோபி, எஸ்.வி.டி.சாய், வி.எஸ்.ஆர்.கே.ராமு, மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

துணை முதல்வர் பிறந்தநாள்! கோடம்பாக்கம் மு.சத்யா ஏற்பாட்டில்

500 நபர்களுக்கு உணவு! மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

தமிழச்சி தங்கபாண்டியன் - ஜெ.கருணாநிதி - கே.ஏழுமலை பங்கேற்பு!

சென்னை நவ:26

சென்னை தென்மேற்கு மாவட்டம்,துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, மாவட்ட துணைச் செயலாளர் கோடம்பாக்கம் மு. சத்யா ஏற்பாட்டில் 500 நபர்களுக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி காமராஜர் காலனி, கலைஞர் இலவச இ சேவை மையம் அருகில் 27.11.2024 நண்பகல் 12 மணியளவில் நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. 500 நபர்களுக்கு உணவு வழங்குகிறார்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பகுதி செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் கே.ஏழுமலை, மாணவர் அணி இணை செயலாளர் எஸ்.மோகன், கோ.சு.மணி, மாம்பலம் சந்திரசேகர், நந்தனம் வேதா, கே.மலர், ராஜா அன்பழகன், நா.மோ முரளி, கார்த்திகா பாஸ்கர், கே. எஸ். வெல்டிங் ராஜா,புலியூர் டி.மோசஸ், உமாசங்கர், அஸ்வின் குமார்,மு. பாலகுரு, எஸ். கே. நசீர், சா.தேவராசு,சி..சங்கர், எம். ராமச்சந்திரன்,எம். சேகர் பிரஸ் கோவிந்த் எம்.குப்பம் மாள், காலனி பி.வேலு, தேவராஜ், ரஜினி,பி.சுந்தர், எஸ்.விஜயன், ஒய்.எட்வின், டி.ராஜசேகர், ஆனந்தராஜ், மங்கள்ராஜ், சாந்தி, பிரேமா, மாரியம்மா,சசி, வசந்த்,கலையரசன், பிரசாந்த், உதயநிதி விக்னேஷ், டி.தங்கராஜ் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

செயல் ஜெயக்குமார், மா.சீனிவாசன்,பா. சங்கர்,து.விவேக் ஆகியோர் நன்றி உரையாற்றுகின்றனர்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்பு:

30 'அ' வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

வட்ட செயலாளர் டி. சுந்தரம் வேண்டுகோள்!

சென்னை, நவ. 26-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்குப் பகுதி 30 (அ) வட்டக் கழகத்தின் சார்பில் மாநில இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு. விநாயகபுரம் சமர்ப்பணம் இல்லம் மனநலம் குன்றிய மாணவர்களுக்கு ஒரு வாரத்திற்கு உண்டான உணவுப் பொருட்கள், அரிசி மூட்டை, பால் ரொட்டி காய்கறி வகைகளை வழங்கி துணை முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு 27.11.2024 அன்று பிற்பகல் 12 மணிக்கு மாணவர்களுடன் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், கேக் வெட்டி மதிய உணவு வழங்கி கொண்டாடுகிறார்.

இதில் மண்டல குழு தலைவர் எஸ்.நந்தகோபால், பகுதி செயலாளர் ஜி. துக்காராம், மாமன்ற உறுப்பினர் திருமலை, ஜி. துரைசாமி, புத்தகரம் இ.ஏழுமலை, குணசுந்தரி, குட்டி மோகன், எம்.சரவணன், டாக்டர் ஜி.பார்த்தசாரதி, இராமன். எஸ்.பி. கண்ணன், என்.சுரேஷ், பரமேஸ்வரி, சக்கரபாணி, அபிப் ரகுமான், பிஎஸ்என்எல் தயாளன், ஏவி.முருகன், கே. நரேந்திரன், எம். சீனிவாசன், என். ராஜு, கௌதமன், உமா மகேஸ்வரி, மாதவி தரணி, கே. வெற்றிவேல், வெங்கட்ராமன், கருணாநிதி, காஞ்சி சண்முகம், பி.வி. ராஜு, செண்பகராஜ், பிஎஸ்என்எல் குமார், டி. எஸ். உதயநிதி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட வட்ட கழக செயலாளர் டி. சுந்தரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அண்ணா நகர் தெற்கு

106 (அ) வட்டம் கோ.கபாலி மறைவு!

பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் - முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, நவ.26-

அண்ணா நகர் 106 (அ) வட்ட கழக முன்னாள் பொருளாளர் கழக மூத்த முன்னோடி கோ.கபாலி (24-11-2024) நேற்று முன் தினம் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

செய்தியறிந்ததும் அண்ணா நகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம், வட்ட கழக செயலாளர்கள் ந.அதியமான், இரா.பொன்னுரங்கம், இரா.நவீந்திரகுமார், ப.மகேஷ் ராஜா, தெ.கருணாநிதி, விஎம்.சிவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (25-11-2024) காலை 9.00 மணிஅளவில் அரும்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், பெரம்பூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டனர். சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் முன்னிலையில் 45வது வட்ட கழக செயலாளர் முரசொலி ஜி.மாரிமுத்து தலைமையில் 45வது வட்டத்தில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் புதிய வாக்காளர் சேர்த்தல் மற்றும் திருத்தம் முகாம் நடைபெற்றது. இதில் அனைத்து பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிவுறுத்தல் படி 16,17 மற்றும் 23/24/11/24 ஆகிய தேதிகளில் நடைபெற்ற வாக்காளர் முகாம்களில் 107(அ) வட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், அண்ணா நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் ந. இராமலிங்கம் ஆளும் கட்சி தலைவர் (GCC) 2026 அண்ணா நகர் சட்டமன்ற பார்வையாளர் தமிழன் பிரசன்னா, கார்த்திக் மோகன், உள்ளிட்டார் ஆய்வு செய்தனர். உடன் வட்ட செயலாளர் வி.எம். சிவா, வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.